செ.கு.எண் :- 256 நாள் :- 23.07.12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 23.7.2012

தூத்துக்குடி மாவட்டம், எட்டையாபுரம் வட்டம், சிதம்பராபுரம் கிராமம், எட்டையாபுரம் - கோவில்பட்டி தேசிய நெடுஞ்சாலையில், சிதம்பராபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் 19.7.2012 அன்று விளாத்திக்குளத்திலிருந்து தென்காசி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தின் முன்பக்க டயர் கழன்று ஓடியதில் நிலைதடுமாறி எதிரே வந்த இரு சக்கர வாகனம் மீது மோதியதில், இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த கோவில்பட்டி நகரம், சீனிவாச நகரைச் சேர்ந்த திரு. சுப்புராஜ் என்பவரின் மனைவி திருமதி லதா படுகாயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், வம்பன் கிராமம், புதுக்கோட்டை – ஆலங்குடி நெடுஞ்சாலையில் 20.7.2012 அன்று சென்னையிலிருந்து பேராவூரணி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து, அச்சாலையில் சென்று கொண்டிருந்த இரு சக்கர வாகனம் மீது மோதியதில், புதுக்கோட்டை, போஸ் நகரைச் சேர்ந்த திரு. பன்னீர்செல்வம் என்பரது மகன் சரவணன் மற்றும் திருவரங்குளம், பெரியநாயகிபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் முத்து ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

ஆலங்குடி வட்டம், தோப்புக்கொல்லை கிராமம், புதுக்கோட்டை – ஆலங்குடி நெடுஞ்சாலையில் 21.7.2012 அன்று ஆலங்குடியிலிருந்து புதுக்கோட்டை சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து எதிரே வந்த இரு சக்கர வாகனம் மீது மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த கறம்பக்குடி வட்டம், மாங்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. பழனிவேல் என்பவரின் மகன் திரு. முருகன் சம்பவ இடத்திலேயும், அவரது மனைவி திருமதி தமிழரசி பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த லதா, சரவணன், முத்து, முருகன் மற்றும் தமிழரசி ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தூத்துக்குடி மாவட்டம், எட்டையாபுரம் கிராமத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில் பேருந்தில் பயணம் செய்த மூன்று நபர்கள் காயம் அடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், தூத்துக்குடி மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், இவர்கள் மூவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துயரச் சம்பவங்களில் காலமான லதா, சரவணன், முத்து, முருகன் மற்றும் அவரது மனைவி தமிழரசி ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், தூத்துக்குடி மாவட்டம், எட்டையாபுரம் கிராமத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

2/2